# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 298 | 4 Pages | 1.6.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 298 | 4 பக்கங்கள் | 1.6.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


# 'இந்தியா' கூட்டணி ஆலோசனை கூட்டம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் டெல்லி பயணம் ரத்து

சென்னை, ஜூன் 1

இந்தியாகூட்டணிகட்சிதலைவர்கள் டெல்லியில் நாளை (1ம் தேதி) ஆலோசனை நடத்த முடிவு செய்துள்ளனர். காங்கிரஸ், தி.மு.க, சமாஜ்வாதி, தேசியவாத காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட 28 கட்சி தலைவர்களுக்கும் டெல்லியில் நடக்கும் கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதில் இந்தியா கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பது குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என தகவல் வெளியானது.



இந்த ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்பதற்காக தி.மு.க. தலைவரும் முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின் டெல்லிக்கு நாளை (1ம் தேதி) பயணம் மேற்கொள்வார் என தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், முதல்அமைச்சரின் டெல்லி பயணம் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது. அவருக்கு பதிலாக தி.மு.க எம்.பி., டி.ஆர்.பாலு டெல்லி செல்கிறார் என தகவல் வெளியாகி உள்ளது. இந்த ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்க போவதில்லை என திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், மேற்கு வங்க முதல் மந்திரியுமான மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# தேர்தலில் வெற்றி பெற்று மோடி மூன்றாவது முறையாக பிரதமர் ஆவது உறுதி: ராமதாஸ் நம்பிக்கை



விழுப்புரம், ஜூன் 1

திண்டிவனம் அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது;

"மக்களவைத் தேர்தல் முடிவுக்கு வருகிறது. ஜூன் 4ந்தேதி முடிவுகள் அறிவிக்கப்படும்போது மத்தியில் நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பிரதமர் ஆவது உறுதி செய்யப்படும். பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் 400க்கும் கூடுதலான இடங்களில் வெற்றி பெறுவது உறுதி.

தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா, பா.ம.ககூட்டணி 20க்கும் மேற்பட்ட இடங்களை கைப்பற்றும். மத்தியில் மோடி ஆட்சி மீண்டும் அமைந்த பிறகு, தமிழ்நாட்டிற்கு தேவையான திட்டங்களை மத்திய அரசிடமிருந்து போராடிப் பெறுவோம். தமிழகம் முன்னேற பாடுபடுவோம் .

தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் அரசுத் துறைகளில் காலியாகவுள்ள மூன்றரை லட்சம் பணியிடங்கள் நிரப்பப்படும் எனவும், 2 லட்சம் புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும் எனவும் தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த 3 ஆண்டுகளில் 27,858 பேருக்கு மட்டும்தான் தேர்வாணையம் மூலம் வேலை வழங்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் கடந்த 3 ஆண்டுகளில் ஒரு லட்சம் பேருக்கும் கூடுதலாக ஓய்வு பெற்றுள்ளனர். அதனால் ஏற்பட்ட காலியிடங்களையும் கணக்கில் சேர்த்தால் குறைந்தது 6 லட்சம் பேருக்கு அரசு வேலை வழங்கப்பட வேண்டும். தி.மு.க. அரசின் பதவிக் காலம் இன்னும் 2 ஆண்டுகள் மட்டுமே இருக்கும் நிலையில் அதற்குள்ளாக 6 லட்சம் பேருக்கு அரசு வேலை எப்படி வழங்கப்படும் என்பதை தி.மு.க. அரசு தெரிவிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் சேவை பெறும் உரிமைச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறேன். வருவாய்த்துறை சார்பில் வழங்கப்படும் சாதி சான்று, வருவாய் சான்று உள்ளிட்ட 26 வகையான சான்றிதழ்கள் மற்றும் பட்டா மாறுதல் கோரும் மனுக்கள் மீது 16 நாட்களில் முடிவெடுக்க வேண்டும் என்று வருவாய்த்துறை ஊழியர்களுக்கு வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர் உத்தரவிட்டுள்ளார். இது வரவேற்கத்தக்கது ஆனால், போதுமானதல்ல.

இதையே சேவை பெறும் உரிமைச் சட்டமாக இயற்ற வேண்டும். சட்டமாக இயற்றப்பட்டால், பல்வேறு சேவைகள் மக்களுக்கு வழங்கப்படுவதற்கான காலக்கெடு நிர்ணயிக்கப்படும். சேவை பெறும் உரிமைச் சட்டத்தை அரசு வரும் கூட்டத் தொடரில் நிறைவேற்ற வேண்டும். இதை வலியுறுத்தி விரைவில் மாபெரும் போராட்டத்தை பா.ம.க. நடத்தவுள்ளது.

கன்னியாகுமரியில் பிரதமர் நரேந்திர மோடி தியானம் செய்வதில் எந்த தவறும் இல்லை. தேர்தல் நடத்தை விதிகளுக்கும் இதுக்கும் தொடர்பு இல்லை. தியானம் மேற்கொள்வது ஒவ்வொரு தனி நபரின் உரிமை அந்த உரிமை பிரதமருக்கும் உண்டு. இதை தேர்தல் பரப்புரையாக கருத முடியாது. கடந்த 2019 தேர்தலின்போதும் இறுதி கட்ட தேர்தலின்போது உத்தரகாண்ட் பகுதி இமயமலையில் உள்ள கேதார்நாத்தில் தியானம் செய்தார் அப்போது எதுவும் பேசாத எதிர்கட்சிகள் தற்போது விமர்சிப்பது காரணம் தோல்வி பயம்தான் .

பிரதமர் மோடி தமிழர்களை எந்த வகையிலும் அவமதிக்கவில்லை. ஒடிசாவில் பிரசாரம் செய்தபோது அம்மாநிலத்தில் அரசியல் ஆதிக்கம் செலுத்தி வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் அதிகாரியை மறைமுகமாக குறிப்பிட்டு சில குற்றச்சாட்டுகளை தெரிவித்துள்ளார். தனிநபரை பற்றி கூறிய கருத்து எப்படி ஒட்டுமொத்த தமிழர்களின் அவமதிப்பு செய்வதாகும். அரசியல் செய்யவே தி.மு.க. இப்படி குற்றச்சாட்டு கூறுகிறது."

இவ்வாறு ராமதாஸ் தெரிவித்தார்.

# 'அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்பட வேண்டும் என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறார்': எல்.முருகன்

சென்னை, ஜூன் 1

சென்னையில் மத்திய மந்திரியும், நீலகிரி தொகுதி பா.ஜ.க. வேட்பாளருமான எல்.முருகன் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"பிரதமர் மோடி கோவிலுக்கு செல்வது எப்படி தேர்தல் விதிமீறலாக இருக்க முடியும்? எதிர்கட்சிகள் தற்போது தோல்வி பயத்தில் இருப்பதால் இதுபோன்ற கருத்துகளை கூறுகிறார்கள். பிரதமர் கோவிலுக்கு செல்வதையோ, தியானம் செய்வதையோ யாராலும் தடுக்க முடியாது.

மறைந்த தமிழக முதல்அமைச்சர் ஜெயலலிதாதமிழகத்தில் பல்வேறு ஆன்மீக பணிகளில் ஈடுபட்டிருந்தார். பல கோவில்களை புணரமைத்து, கும்பாபிஷேக விழாக்



களை நடத்தினார். சட்டப்பிரிவு 370ஐ ஜெயலலிதா ஆதரித்து பேசியிருக்கிறார்.

அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்பட வேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறார். அவர் பேசியதற்கான ஆதாரம் ராஜ்ய சபா குறிப்பில் உள்ளது."

இவ்வாறு எல்.முருகன் தெரிவித்தார்.


# வாக்கு எண்ணிக்கை ஏற்பாடுகள்; தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு ஆலோசனை

சென்னை, ஜூன்1

நாடாளுமன்ற மக்களவை தேர்தலின் 7வது மற்றும் கடைசி கட்ட தேர்தல் வரும் ஜூன் 1ந்தேதி நடைபெற உள்ளது. தொடர்ந்து ஜூன் 4ந்தேதி வாக்குகள் எண்ணப்பட்டு, அன்றைய தினமே தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

தமிழகத்தில் உள்ள 39 மக்களவை தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை, 39 மையங்களில் உள்ள 43 கட்டிடங்களில் நடைபெற உள்ளது. மொத்தம் 234 அறைகளில் நடைபெறக்கூடிய இந்த வாக்கு எண்ணிக்கை பணிக்காக ஒவ்வொரு அறையிலும் 14 மேஜைகள் போடப்பட்டிருக்கும். வாக்கு எண்ணிக்கையின்போது ஒவ்வொரு மேஜையிலும் தனித்தனியாக வீடியோ பதிவு நடைபெறும்.

தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை பணிகளில் நுண் பார்வையாளர்கள், தேர்தல் அலுவலர்கள் உள்பட 38 ஆயிரத்து 500 பேர் ஈடுபடுத்தப்பட உள்ளனர். முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டு, அதன் பிறகு வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகள் எண்ணப்படும்.



இந்த நிலையில் வாக்கு எண்ணிக்கைக்கான ஏற்பாடுகள் தொடர்பாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தலைமையில் இன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் காணொலி காட்சி வாயிலாக மாவட்ட தேர்தல் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## ஐ.நா. மதிப்புமிக்க விருது: இந்திய ராணுவ அதிகாரிக்கு வழங்கி கவுரவித்த அன்டோனியோ குட்டரெஸ்




நியூயார்க்: ஜூன் 1

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் வீரர்களின் சர்வதேச தினம் மே 30ம் தேதி அன்று கடைப்பிடிக்கப்பட்டது.

காங்கோவில் ஐ.நா. பணியில் பணியாற்றி வரும் இந்திய வீராங்கனை மேஜர் ராதிகா சென்னுக்கு மதிப்புமிக்க 2023 ஐக்கிய நாடுகளின் ராணுவ பாலின வழக்கறிஞர் விருது அறிவிக்கப்பட்டது.

காங்கோ ஜனநாயகக் குடியரசில் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணியாளராக பணியாற்றினார் மேஜர் சென்.


அவர் மார்ச் 2023 முதல் ஏப்ரல் 2024 வரை காங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்குப் பகுதியில் பட்டாலியனுக்கான படைப்பிரிவின் தளபதியாக பணியாற்றினார். மேஜர் சுமன் கவானிக்கு பிறகு இந்த மதிப்புமிக்க விருதைப் பெறும் 2வது இந்திய அமைதி காக்கும் வீரர் மேஜர் சென் ஆவார்.

மேஜர் சென்னின் சேவையைப் பாராட்டிய குட்டரெஸ், அவர் ஒரு உண்மையான தலைவர் மற்றும் முன்மாதிரி. அவரது சேவை ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒரு உண்மையான வரவு. வடக்கு கிவுவில் அதிகரித்து வரும் மோதல் சூழலில், அவரது துருப்புக்கள் பெண்கள் மற்றும் சிறுமிகள் உட்பட மோதலால் பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் தீவிரமாக ஈடுபட்டன. பணிவு, இரக்கம் மற்றும் அர்ப்பணிப்புடன் அவர்களின் நம்பிக்கையைப் பெற்றார் என குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, மேஜர் ராதிகா சென் கூறுகையில், விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு நன்றி. சவாலான சூழலில் பணியாற்றும் அனைத்து அமைதி காக்கும் படையினரின் கடின உழைப்புக்கு அங்கீகாரம் அளிப்பதால் இந்த விருது எனக்கு சிறப்பு வாய்ந்தது. மேலும் சமூகத்தில் ஒரு நேர்மறையான மாற்றத்தைக் கொண்டுவர தங்களால் இயன்றதை வழங்குகிறது என தெரிவித்தார்.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நேற்று நடந்தவிழாவில்ஐ.நா.பொதுச்செயலாளர்அன்டோனியோகுட்டரெசிடம் இருந்து மதிப்புமிக்க 2023 ஐக்கிய நாடுகளின் ராணுவ பாலின வழக்கறிஞர் விருதை மேஜர் ராதிகா சென் பெற்றார்.

## ஈரானுக்கு தானியங்கள் ஏற்றிச்சென்ற கப்பலை தாக்கிய ஹவுதி



இஸ்ரேல், மே. 31

காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் ஹமாஸ்க்கு ஆதரவாக ஏமன் நாட்டியில் செயல்பட்டு வரும் ஹவுதி குழு செயல்பட்டு வருகிறது.

இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுப்பதற்காக செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் ஹவுதி குழுவினருக்கு எதிராக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இருந்த போதிலும் ஏவுகணைகள் மூலம் ஹவுதி தனது தாக்குலை தொடர்கிறது.

அப்படித்தான் கீரிஸ் நாட்டைச் சேர்ந்தவருக்கு சொந்தமான மார்ஷல் தீவின் கொடியுடன் சென்ற கப்பல் மீது நேற்று முன்தினம் ஹவுதி தாக்குதல் நடத்தியது. இதனால் கப்பல் சேதமாகி, தண்ணீர் கப்பலுக்குள் சென்றது. ஆனால், கப்பலில் இருந்த மாலுமிகளுக்கு ஆபத்து ஏதும் நேரவில்லை.

இந்த நிலையில் லாக்ஸ் என்ற தாக்குதலுக்கு உள்ளான கப்பல் ஈரானுக்கு தானியங்கள் ஏற்றி சென்றது எனத் தெரியவந்துள்ளது. கப்பல் முழுவதும் தானியங்கள் நிரம்பியிருந்த நிலையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஹவுதி குழுவுக்கு ஈரான்தான் முழு ஆதரவு கொடுத்து வருகிறது. இந்த நிலையில் ஆதரவு அளித்த நாட்டிற்கு தானியங்கள் கொண்டு சென்ற கப்பல் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்து செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவில் செல்லும் கப்பல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதுவரை 50க்கும் மேற்பட்ட கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. மூன்று மாலுமிகள் உயிரிழந்துள்ளனர். ஒரு கப்பலை சிறைப்பிடித்தது. மற்றொரு கப்பலை மூழ்கடித்தது. ஏமன் மீது பறந்த டிரோனை சுட்டு வீழ்த்தியதாக ஹவுதி தெரிவித்துள்ளது. ஆனால் அமெரிக்க விமானப்படை டிரோன் ஏதும் மாயமாகவில்லை எனத் தெரிவித்துள்ளது.

## உலகின் முதல் மர செயற்கைகோள் விஞ்ஞானிகள் உருவாக்கினர்



ஜப்பான், ஜூன் 1

உலகின் முதல் மர செயற்கைக்கோளை ஜப்பான் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

கியோட்டோ பல்கலைக்கழகம் மற்றும் சுமிட்டோமோ பாரெஸ்ட்ரி நிறுவனத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த செயற்கைக்கோளை தயாரித்துள்ளனர்.

சோதனை முறையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த செயற்கைக்கோளின் ஒவ்வொரு பக்கமும் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) அளவைக் கொண்டுள்ளது. லிக்னோசாட் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த செயற்கைக்கோள் வருகிற செப்டம்பர் மாதம் விண்ணில் ஏவப்படுகிறது.

லிக்னோசாட் செயற்கைக்கோள் மக்னோலியா மரத்தினால் செய்யப்பட்டதாகும்.

வெளிபுறத்தில் சூரிய மின் தகடுகள் பொருத்தப்பட்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. லிக்னோசாட் திட்டம் சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறு விண்வெளியை மேம்படுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தொவித்தனர்.

# நடனமாட அழைத்து சென்று இளம்பெண்களை விபசாரத்தில் தள்ளிய கொடுமை

சென்னை, ஜூன். 1

வெளிநாடுகளில் உள்ள ஓட்டல்களில் நடனமாடினால் கைநிறைய லட்சம் லட்சமாகசம்பாதிக்கலாம் என்று ஆசை காட்டி, தமிழக இளம்பெண்களை அழைத்துச்சென்று அங்கு விபசாரத்தில் தள்ளும் கொடுமைநீண்டகாலமாக அரங்கேற்றப்பட்டு வருகிறது.

சம்பாதிக்கும் ஆசையில் சென்ற பல இளம்பெண்கள் விபசாரத்தில் தள்ளப்பட்டு பல்வேறு கொடுமைகளை அனுபவித்துவிட்டு சீரழிந்த நிலையில் மீண்டும் தமிழகம் வருவது வாடிக்கையாக உள்ளது. சமீபத்தில் இதுபோன்ற கொடுமையில் சிக்கி தமிழகம் தப்பி வந்த இளம்பெண் ஒருவர் இதுகுறித்து சென்னை போலீஸ்கமிஷனர்அலுவலகத்தில் பரபரப்பு புகார் மனு ஒன்றை கொடுத்தார்.

அந்த புகார் மனுவில் ஒரு குறிப்பிட்ட விபசார கும்பல் இதுபோன்ற கொடுமையான செயல்பாடுகளில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டியிருந்தார். அந்த கும்பல் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கும்படியும் அந்த இளம்பெண் தனது புகாரில் கோரிக்கை வைத்திருந்தார். இதுதொடர்பாக உரியநடவடிக்கை எடுக்கும்படி விபசார தடுப்பு பிரிவு போலீசாருக்கு, கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டார். கூடுதல் கமிஷனர் செந்தில்குமாரி மேற்பார்வையில் இதற்காக தனிப்படை அமைக்கப்பட்டது.

தனிப்படை போலீசார் தீவிர விசாரணை நடத்தி குறிப்பிட்ட விபசார புரோக்கர் கும்பலை சேர்ந்த பிரகாஷ்ராஜ் (வயது 24), ஜெயக்குமார் (40), ஆபியா (24) ஆகியோரை கைது செய்தனர். இவர்கள் ஏராளமான இளம்பெண்களை ஏமாற்றி வெளிநாடுகளுக்கு அனுப்பி விபசாரத்தில் தள்ளியது தெரியவந்துள்ளது. இந்த வழக்கில் மேலும் 4 முக்கிய குற்றவாளிகளை போலீசார் தேடி வருகிறார்கள்.

வெளிநாட்டு ஓட்டல்களில் நடனமாட அழைத்து சென்றுஇளம்பெண்களை விபசாரத்தில் தள்ளிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# விவேகானந்தர் மண்டபம் செல்ல சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி

கன்னியாகுமரி, ஜூன்1

மக்களவை தேர்தலுக்கான இறுதிக்கட்ட பிரசாரம் நேற்றுடன் நிறைவடைந்தது. இதைத் தொடர்ந்து பிரதமர் மோடி தியானம் செய்வதற்காக நேற்று மாலை கன்னியாகுமரி வந்தார். இதற்காக அவர் தேர்தல் பிரசாரத்தை முடித்துக்கொண்டு வாரணாசியில் இருந்து தனி விமானம் மூலம் திருவனந்தபுரம் வந்தார்.திருவனந்தபுரத்தில் இருந்து ஹெலிகாப்டரில் கன்னியாகுமரி வந்து சேர்ந்த பிரதமர் மோடி, கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார்.இதைத் தொடர்ந்து கடல் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் மண்டபத்திற்கு சென்றார். அதன்பிறகு தியான மண்டபத்திற்கு சென்று பிரதமர் மோடி தியானத்தை தொடங்கினார். இரவு முழுவதும் தியான மண்டபத்தில் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டார். பிரதமர் மோடி மேற்கொள்கிறார் . பிரதமர் மோடி விவேகானந்தர் மண்டபத்தில் தியானம் மேற்கொண்டு வருவதையடுத்து அங்கு சுற்றுலா பயணிகள் நேற்று மதியத்துக்கு பிறகு அனுமதிக்கப்படவில்லை. இந்த நிலையில் இன்று காலை முதல் விவேகானந்தர் மண்டபத்துக்கு சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.அவர்களின் முகவரி உட்பட பல்வேறு தகவல்களை போலீசார் பதிவு செய்து பலத்த சோதனைக்கு பிறகு விவேகானந்தர் மண்டபத்திற்கு செல்ல அனுமதித்தனர். பயணிகள் சென்ற படகிலும் ஏராளமான போலீசார் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.விவேகானந்தர் மண்டபத்தில் பிரதமர் தியானம் மேற்கொண்டுள்ள பகுதிக்கு செல்ல சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படவில்லை. மற்ற இடங்களுக்கு மட்டும் வழக்கம் போல் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

# விவேகானந்தர் மண்டபம் செல்ல சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி

கன்னியாகுமரி, ஜூன்1

மக்களவை தேர்தலுக்கான இறுதிக்கட்ட பிரசாரம் நேற்றுடன் நிறைவடைந்தது. இதைத் தொடர்ந்து பிரதமர் மோடி தியானம் செய்வதற்காக நேற்று மாலை கன்னியாகுமரி வந்தார். இதற்காக அவர் தேர்தல் பிரசாரத்தை முடித்துக்கொண்டு வாரணாசியில் இருந்து தனி விமானம் மூலம் திருவனந்தபுரம் வந்தார்.திருவனந்தபுரத்தில் இருந்து ஹெலிகாப்டரில் கன்னியாகுமரி வந்து சேர்ந்த பிரதமர் மோடி, கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார்.இதைத் தொடர்ந்து கடல் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் மண்டபத்திற்கு சென்றார். அதன்பிறகு தியான மண்டபத்திற்கு சென்று பிரதமர் மோடி தியானத்தை தொடங்கினார். இரவு முழுவதும் தியான மண்டபத்தில் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டார். பிரதமர் மோடி மேற்கொள்கிறார் . பிரதமர் மோடி விவேகானந்தர் மண்டபத்தில் தியானம் மேற்கொண்டு வருவதையடுத்து அங்கு சுற்றுலா பயணிகள் நேற்று மதியத்துக்கு பிறகு அனுமதிக்கப்படவில்லை. இந்த நிலையில் இன்று காலை முதல் விவேகானந்தர் மண்டபத்துக்கு சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.அவர்களின் முகவரி உட்பட பல்வேறு தகவல்களை போலீசார் பதிவு செய்து பலத்த சோதனைக்கு பிறகு விவேகானந்தர் மண்டபத்திற்கு செல்ல அனுமதித்தனர். பயணிகள் சென்ற படகிலும் ஏராளமான போலீசார் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.விவேகானந்தர் மண்டபத்தில் பிரதமர் தியானம் மேற்கொண்டுள்ள பகுதிக்கு செல்ல சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படவில்லை. மற்ற இடங்களுக்கு மட்டும் வழக்கம் போல் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

# ஆம்னி பஸ்சில் ஐ.டி. பெண் ஊழியருக்கு பாலியல் தொல்லை

கோவை, ஜூன்1

விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த 26 வயது பெண், கோவையில்ஐ.டி. நிறுவனத்தில் ஊழியராக பணிபுரிந்து வருகிறார். அந்த பெண் கடந்த வாரம் விடுமுறையில் சொந்த ஊருக்கு சென்றார். விடுமுறை முடிந்ததும் பணிக்கு செல்வதற்காக விருதுநகரில் இருந்து கோவைக்கு செல்லும் ஆம்னி பஸ்சில் டிக்கெட் முன்பதிவு செய்தார்.

அவர், கடந்த 28ந் தேதி இரவு விருதுநகரில் இருந்து ஆம்னி பஸ்சில் கோவைக்குபுறப்பட்டார். மறுநாள் காலையில் அந்த பஸ் கோவை காந்திபுரத்திற்கு வந்தது. அதில் இருந்து ஒவ்வொரு பயணிகளாக கீழே இறங்கி கொண்டிருந்தனர். ஐ.டி. பெண் ஊழியரும் தனது உடைமைகளை எடுத்து கொண்டு பஸ்சை விட்டு கீழே இறங்க முயன்றார்.

அப்போது பஸ்சில் கிளீனராக பணிபுரியும் தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த சந்திரன் என்ற சுபாஸ் சந்திரபோஸ்(41), ஐ.டி. பெண் ஊழியருக்கு பாலியல் தொல்லை கொடுத்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த பெண் சத்தம் போட்டார். அப்போது அவரை அழைத்து செல்வதற்காக வந்திருந்த அவரது உறவினர்கள் மற்றும் சக பயணிகளும் அந்த கிளீனரை கண்டித்தனர்.

மேலும் அந்த பெண் அளித்த புகாரின் பேரில் காட்டூர் போலீசார் வழக்கு பதிவு செய்து சந்திரனை கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.


# சென்னை செங்கல்பட்டு மின்சார ரெயில் சேவையில் மாற்றம்

சென்னை, ஜூன் 1

சென்னை கடற்கரையிலிருந்து செங்கல்பட்டு வரை இயக்கக்கூடிய மின்சார ரெயில்கள் சென்னைக்கு மிக முக்கிய போக்குவரத்து சேவையாக உள்ளது. சென்னை புறநகர் மற்றும் சென்னை உள்பகுதிகளைஇணைக்க கூடிய போக்குவரத்து சேவையாக இருப்பதால், தினமும் பல ஆயிரக்கணக்கான பயணிகள் ரெயில் போக்குவரத்தை பயன்படுத்துகின்றனர்.

இந்த நிலையில், சென்னை கடற்கரை செங்கல்பட்டு இடையிலான மின்சார ரெயில் சேவை இன்று மற்றும் ஜூன் 4 ஆகிய தேதிகளில் மாற்றம் செய்யப்பட உள்ளது. சென்னைஎழும்பூர்விழுப்புரம் மார்க்கத்தில், செங்கல்பட்டு பணிமனையில் பொறியியல் பணி நடக்க உள்ளதால், மின்சார ரயில் சேவையில் மாற்றம் செய்யப்பட உள்ளது.

அதன்படி, சென்னை கடற்கரை செங்கல்பட்டுக்கு காலை 9.30, 10.56, 11.40, 12.40 ஆகிய நேரங்களில் இயக்கப்படும் மின்சார ரெயில்கள், சிங்கபெருமாள்கோவில் வரை மட்டுமே செல்லும். அதேபோல, செங்கல்பட்டு சென்னை கடற்கரைக்கு முற்பகல் 11.30, மதியம் 1.00, 1.45, பிற்பகல் 3.05 ஆகிய நேரங்களில் புறப்பட வேண்டிய மின்சார ரெயில்கள், சிங்க பெருமாள் கோவிலில் இருந்து புறப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 2வது திருமணத்துக்கு இடையூறாக இருந்ததாக 3 வயது குழந்தையை தரையில் தூக்கி வீசி தாக்கிய கொடூர தந்தை

கிருஷ்ணகிரி, ஜூன் 1

இரண்டாவது திருமணத்துக்கு இடையூறாக இருந்ததாக கூறி 3 வயது குழந்தையை தந்தை, தரையில் தூக்கி வீசி தாக்கிய கொடூரம் அரங்கேறியுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி சிப்காட் பகுதியைச் சேர்ந்த தம்பதி சக்திவேல்சுதா. இவர்கள் இருவரும் செங்கல் சூளையில் வேலை பார்த்து வந்த நிலையில், செங்கல் சூளை நடத்தி வந்த பூவரசனுடன் சுதாவுக்கு தகாத உறவு இருந்து வந்துள்ளது. இது குறித்து கண்டித்ததால் சக்திவேலை அவரது மனைவி சுதா பிரிந்து சென்றதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், இரண்டாவது திருமணம் செய்ய இருந்த சக்திவேலுக்கு, அவரது குழந்தையை காரணம் காட்டி, பெண் தர மறுத்துள்ளனர். இதனால் விரக்தியில் இருந்த அவர், தனது 3 வயது குழந்தையை தரையில் வீசி கொடூரமாக தாக்கியுள்ளார். இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.படுகாயமடைந்த குழந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில், சம்பவம் குறித்து தகவலறிந்த போலீசார், சக்திவேலை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வீடு புகுந்து துணை நடிகை பாலியல் பலாத்காரம்: சென்னையில் பயங்கரம்

சென்னை, ஜூன் 1

தெலுங்கானா மாநிலம், ஐதராபாத்தை சேர்ந்த 30 வயதான பெண் ஒருவர், தொலைக்காட்சி தொடர்களில் துணை நடிகையாக நடித்து வருகிறார். கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக சென்னை வளசரவாக்கத்தில் உள்ள உறவினர் வீட்டில் தங்கி இருந்தார்,

இந்த நிலையில் அவரது உறவினர், வேலை விஷயமாக ஐதராபாத் சென்று விட்டார். இதனால் வீட்டில் துணை நடிகை மட்டும் தனியாக இருந்தார். நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டுக்குள் 6 பேர் புகுந்தனர். அதில் முருகேசன் என்பவர் வெளியில் 2 பேரை காவலுக்கு நிற்க வைத்துவிட்டு துணை நடிகையை வலுக்கட்டாயமாக பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது. இதுபற்றி வளசரவாக்கம் போலீஸ் நிலையத்தில் துணை நடிகை புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். பின்னர் சம்பவம் தொடர்பாக முருகேசன் (27), கல்யாணகுமார் (28), அருண்பாண்டி (23), மாரியப்பன் (23), பெரிய நம்பி ராஜ் (27), முப்பிடாதி (26) ஆகிய 6 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இவர்களில் கைதான முருகேசன், திரைப்பட நடிகர் ஒருவரிடம்கார்டிரைவராகவேலை செய்து வருவதாக போலீசார்தெரிவித்தனர். இந்தசம்பவம் சென்னையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# 'சேர்ந்து வாழவிட மாட்டார்கள்..' தோழிக்கு தகவல் அனுப்பிவிட்டு தற்கொலை செய்த கள்ளக்காதல் ஜோடி

சென்னை, ஜூன் 1

சென்னையை அடுத்த பெரும்பாக்கம் எழில் நகர் 5வது பிளாக்கை சேர்ந்தவர்செல்பியாமேரி (வயது 23). இவருக்கு திருமணமாகி கணவர் மற்றும் 5 வயதில் ஒரு குழந்தை உள்ளது. இதேபோல் செம்மஞ்சேரியை சேர்ந்தவர் விஜய் (30). தனியார் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தில் வேலை செய்து வந்த அவருக்கும், திருமணமாகி மனைவி மற்றும் 3 வயதில் ஒரு குழந்தை உள்ளது.





இந்தநிலையில் செல்பியா மேரிக்கும், விஜய்க்கும் பழக்கம் ஏற்பட்டு கள்ளக்காதலாக மாறியதாக கூறப்படுகிறது. இந்த விவகாரம் இருவரது குடும்பத்தினருக்கும் தெரியவந்தது. இருவரையும் அவர்களது குடும்பத்தினர் கண்டித்தனர்.

இதனால் செல்பியா மேரி, விஜய் இருவரும் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு அவரவர் குடும்பத்தினரை தவிக்க விட்டு விட்டு அதே பகுதியில் தனியாக வாடகைக்கு வீடு எடுத்து தனிக்குடித்தனம் நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் செல்பியா மேரி, தனது தோழி ரேகாவுக்கு செல்போனில் ஒரு தகவல் அனுப்பினார்.

அதில் அவர், "என் வீட்டார் எங்களை சேர்ந்து வாழ விடமாட்டார்கள். அதனால் நாங்கள் இருவரும் தற்கொலை செய்து கொள்கிறோம்" என கூறி இருந்தார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த ரேகா, பெரும்பாக்கம் போலீசாருக்கு தகவல் கொடுத்தார். உடனடியாக போலீசார் சம்பவ இடத்துக்கு சென்றனர். அப்போது வீட்டின் ஹாலில் விஜய், சால்வையால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். படுக்கை அறையில் செல்பியா மேரி, புடவையால் தூக்குப்போட்ட நிலையில் இறந்து கிடந்தார்.

போலீசார் 2 பேரின் உடல்களையும் பிரேத பரிசோதனைக்காக குரோம்பேட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இதுபற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள். இந்த சம்பவம் பெரும்பாக்கம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# ரேஷன்கார்டுகளுக்கு 50 மில்லி வீதம் வினியோகிக்கப்பட்ட மண்ணெண்ணெய்: அதிர்ச்சி அடைந்த மக்கள்



சிவகங்கை, ஜூன் 1

சிவகங்கை அருகே கொல்லங்குடியில் உள்ள ரேஷன்கடை மூலம் கொல்லங்குடி, சாத்தப்புலி, அரியாக்குறிச்சி, அழகர்சாமி நகர் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த 950 ரேஷன்கார்டுதாரர்களுக்கு ரேஷன் பொருட்கள் வினியோகம் செய்யப்படுகிறது.

சில ஆண்டுகளாக ரேஷன்கடைகளுக்கு ஒதுக்கப்படும் மண்ணெண்ணெய் அளவு படிப்படியாக குறைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கொல்லங்குடி ரேஷன்கடைக்கு இந்த மாதம் 38 லிட்டர் மட்டுமே ஒதுக்கப்பட்டது. அதனை 950 ரேஷன் கார்டுகளுக்கும் வழங்க வேண்டும் என்பதால் ஒவ்வொரு கார்டுக்கும் 50 மில்லி அளவு மட்டுமே வினியோகம் செய்ய முடிவு செய்துள்ளனர். 50 மில்லிக்கு தலா ரூ.2 வீதம் வசூலிக்கப்பட்டது. இதனால் ரேஷன்கார்டுதாரர்கள்அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து கொல்லங்குடி கிராம மக்கள் கூறும்போது, "கடந்த காலங்களில் ஒரு கார்டுக்கு 3 லிட்டர் வீதம் மண்எண்ணெய் வழங்கினர். அது படிப்படியாக 2 லிட்டர், ஒரு லிட்டர், அரை லிட்டராக குறைந்தது. பின்னர் 200 மில்லி வழங்கினர். தற்போது 50 மில்லி மட்டுமே தருகின்றனர். இதை வைத்து நாங்கள் என்ன செய்ய முடியும்" என்றனர்.

இதுகுறித்து கூட்டுறவு அதிகாரிகள் கூறுகையில், "சமையல் சிலிண்டர் வைத்திருப்போருக்கு மண்ணெண்ணெய் கிடையாது. ஆனால் அவர்களும் வாங்குகின்றனர். வீடுகளுக்கு சிலிண்டர் இணைப்பை கணக்கிட்டு மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை மத்திய அரசு குறைத்துவிட்டது. இதனால் இதுபோன்ற பிரச்சினை ஏற்படுகிறது," என்றனர்.

# வீடு புகுந்து துணை நடிகை பாலியல் பலாத்காரம்: சென்னையில் பயங்கரம்

சென்னை, ஜூன் 1

தெலுங்கானா மாநிலம், ஐதராபாத்தை சேர்ந்த 30 வயதான பெண் ஒருவர், தொலைக்காட்சி தொடர்களில் துணை நடிகையாக நடித்து வருகிறார். கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக சென்னை வளசரவாக்கத்தில் உள்ள உறவினர் வீட்டில் தங்கி இருந்தார்,


இந்த நிலையில் அவரது உறவினர், வேலை விஷயமாக ஐதராபாத் சென்று விட்டார். இதனால் வீட்டில் துணை நடிகை மட்டும் தனியாக இருந்தார். நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டுக்குள் 6 பேர் புகுந்தனர். அதில் முருகேசன் என்பவர் வெளியில் 2 பேரை காவலுக்கு நிற்க வைத்துவிட்டு துணை நடிகையை வலுக்கட்டாயமாக பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது.

இதுபற்றி வளசரவாக்கம் போலீஸ்நிலையத்தில் துணை நடிகை புகார் செய்தார். அதன்பேரில் போலீசார்வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். பின்னர் சம்பவம் தொடர்பாக முருகேசன் (27), கல்யாணகுமார் (28), அருண்பாண்டி (23), மாரியப்பன் (23), பெரிய நம்பி ராஜ் (27), முப்பிடாதி (26) ஆகிய 6 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவர்களில் கைதான முருகேசன், திரைப்பட நடிகர் ஒருவரிடம் கார் டிரைவராக வேலை செய்து வருவதாக போலீசார் தெரிவித்தனர். இந்த சம்பவம் சென்னையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# போலீஸ் ஏட்டுவை ஓட, ஓட விரட்டி வெட்டிய வாலிபர்கள்: தென்காசியில் பரபரப்பு





ஆலங்குளம், ஜூன் 1

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் போலீஸ் நிலையத்தில் தங்கதுரை, ஜான்சன் ஆகியோர் ஏட்டாக பணியாற்றி வருகின்றனர். இவர்கள் நேற்று முன்தினம் இரவு ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது ஆலங்குளம் பஸ் நிலையம் முன் உள்ள ஒரு ஓட்டலில் டீக்குடித்துக் கொண்டு இருந்தனர்.

அப்போது, அங்கு ஒரு மோட்டார் சைக்கிளில் 2 வாலிபர்கள்வந்தனர். அவர்கள் திடீரென்று போலீஸ்காரர்களை நோக்கி ஓடினார்கள். இதனை சற்றும் கவனிக்காத தங்கதுரையை 2 பேரும் தாக்கினார்கள். உடனே சுதாரித்துக்கொண்ட தங்கதுரை ஒருவரை பிடித்து தள்ளிவிட்டு ஓட முயன்றார். மற்றொரு நபர் தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் தங்கதுரையை ஓட, ஓட விரட்டி வெட்டினார். இதனை கண்ட ஜான்சன் அவர்களை தடுக்க முயன்றபோது அவரையும் அந்த நபர் வெட்ட விரட்டினார்.

இதனால் ஜான்சன் அங்கிருந்து தப்பி ஓடினார். இதனைகண்ட அங்குநின்ற பொதுமக்கள் அலறினார்கள். இதற்கிடையே அரிவாளால் வெட்டப்பட்ட தங்கதுரை தன்னை காப்பாற்றிக்கொள்வதற்காக டீக்கடைக்குள் நுழைந்து தப்பித்தார். அதற்கு பின்னரும் அந்த 2 வாலிபர்களும் போலீஸ்காரரின் மோட்டார் சைக்கிளை அரிவாளால் வெட்டி சேதப்படுத்தி டீக்கடை முன் இருந்த நாற்காலிகள் உள்ளிட்ட பொருட்களையும் அடித்து நொறுக்கி விட்டு அங்கிருந்து தங்களது மோட்டார் சைக்கிளில் தப்பி சென்றனர்.

சக போலீஸ்காரர் வெட்டப்பட்டதை அறிந்த ஆலங்குளம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். லேசான காயங்களுடன் உயிர் தப்பிய தங்கதுரையைமீட்டுசிகிச்சைக்காக அங்குள்ள ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். தொடர்ந்து தப்பி ஓடிய 2 பேர் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

அதாவது, கடந்த 2 நாட்களுக்கு முன் ஆலங்குளம் நல்லூர் சாலையில் சப் இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜ் தலைமையில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அந்த வழியாக ஒரே மோட்டார் சைக்கிளில் வந்த 4 வாலிபர்கள் போலீசாரை கண்டதும் மோட்டார் சைக்கிளில் திரும்பி செல்ல முயன்றனர். இதனை கவனித்த போலீசார் அவர்களை மடக்கி பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.

அதில் ஆலங்குளம் அருகே உள்ள சிவலார்குளத்தை சேர்ந்த முத்தையா மகன்கள் மகேஷ் (26), பெர்லின் (24), கஜேந்திரா (22) மற்றும் மரிய சுந்தரம் மகன் நவீன் ஆகியோர் என்பதும், அவர்களிடம் கஞ்சா பொட்டலம் இருப்பதும் தெரியவந்தது. உடனே 4 பேரையும் கைது செய்த போலீசார், 3 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

மேலும் இன்ஸ்பெக்டர் மாதவன் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினார். அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் போலீசார், மகேசின் வீட்டிற்கு சென்று சோதனை செய்தனர். அங்கு கஞ்சா விற்றதில் கிடைத்த ரூ.2 லட்சத்தை பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து 4 பேரையும், பறிமுதல் செய்யப்பட்ட 3 கிலோ கஞ்சா, ரூ.2 லட்சம் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றையும் ஆலங்குளம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். பின்னர் 4 பேரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

தனது தம்பிகள் கைதானதை அறிந்த முத்தையாவின் மூத்த மகன் கல்யாணசுந்தரம் போலீஸ் நிலையத்திற்கு சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டார். கஞ்சா பொட்டலங்களை வைத்துக் கொண்டு பணத்தை திருப்பி தருமாறு கேட்டுள்ளார்.

பணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து விட்டதால் திருப்பிதர முடியாது என்று தெரிவித்த போலீசார், கல்யாண சுந்தரத்தை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர்.

இந்தநிலையில்பணத்தை திருப்பி தராத போலீசார் மீது ஆத்திரத்தில் இருந்த கல்யாணசுந்தரம் நேற்று முன்தினம் இரவு ரோந்து பணியில் ஈடுபட்ட ஏட்டு தங்கதுரையை தனது நண்பரான தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு அருகே பன்னீருத்தை சேர்ந்த நிர்மல்குமாருடன் சேர்ந்து வெட்டியது தெரியவந்தது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பி ஓடிய 2 பேரையும் வலைவீசி தேடி வந்தனர்.

இந்த நிலையில் ஆலங்குளம் அருகே உள்ள நாச்சியார்புரம் விலக்கு காற்றாலை பகுதியில் கல்யாண சுந்தரம் பதுங்கி இருப்பதாக போலீசுக்கு நேற்று தகவல் கிடைத்தது. இதையடுத்து போலீசார் அங்கு விரைந்து சென்றனர். போலீஸ் வருவதை அறிந்த கல்யாண சுந்தரம் அங்கிருந்து தப்பி ஓட முயன்றார். அப்போது, அவரது லுங்கி தடுக்கி கீழே விழுந்தார். இதில் அவருக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து போலீசார் அவரை பிடித்து அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, கையில் கட்டும் போடப்பட்டது. பின்னர் கல்யாண சுந்தரத்தை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் ஆலங்குளத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னையில் மீண்டும் பயங்கரம்: 2 வயது குழந்தையை கடித்து குதறிய தெருநாய்

சென்னை, ஜூன் 1

சென்னை மாநகராட்சியில் தற்போது, கால்நடைகள் பிரச்சினைகள் அதிகரித்து வருகிறது. இதில் குறிப்பாக, சென்னையில் மக்கள் தினமும் கால்நடையால் ஏற்படும் விபத்துகள் மற்றும் பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர். இதில் 2 கால்நடைகளால்தான் சென்னையில் விபத்துகள் அதிமாக ஏற்படுகிறது.

ஒன்று 'மாடு' மற்றொன்று 'தெருநாய்'. கடந்த ஆகஸ்டு மாதம் அரும்பாக்கத்தில், சிறுமியை மாடு முட்டிய சம்பவத்திற்கு பிறகு, சென்னையில் சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளை பிடிக்கும் நடவடிக்கை மாநகராட்சியால் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. இது ஒருபக்கம் இருக்க தற்போது தெருவுக்கு தெரு சென்னையில் நாய்கள் பிரச்சினை அதிகமாகி கொண்டே இருக்கிறது.

கடந்த 6ந்தேதி நுங்கம்பாக்கத்தில் உள்ள மாநகராட்சி பூங்காவில் விளையாடி கொண்டிருந்த சிறுமி சுரக்ஷாவை வளர்ப்பு நாய் ஒன்று கடித்து குதறியது. இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்த நிலையில், சென்னையில் மீண்டும் இது போல ஒரு சம்பவம் அரங்கேறி உள்ளது.

சென்னை அண்ணாநகர், ஜீவன் பீமாநகர் பகுதியை சேர்ந்தவர் தங்கபாண்டியன் (வயது 31). இவர் மெக்கானிக்கான வேலை பார்த்து வருகிறார். இவருடைய மனைவி பிரதீபா (26). இவர்களுக்கு யாஸ்மிகா என்ற 2½ வயது குழந்தை உள்ளது. தங்கபாண்டியன் தனது குடும்பத்தினருடன் அதே பகுதியில் உள்ள ஒரு வாடகை வீட்டில் முதல் மாடியில் வசித்து வருகிறார்.

இந்தநிலையில், கடந்த 27ந்தேதி தங்கபாண்டியன் வழக்கம்போல வேலைக்கு சென்றார். அப்போது வீட்டில் பிரதீபா மற்றும் யாஸ்மிகா மட்டும் இருந்தனர். மாலை 4 மணியளவில் அந்த பகுதியில் மின்தடை ஏற்பட்டது. அந்த நேரத்தில் யாஸ்மிகா அருகில் உள்ள வீட்டின் முன்பகுதியில் உள்ள தோட்டத்தின் அருகில் விளையாடி கொண்டிருந்ததாக தெரிகிறது.

அப்போது, அந்த தோட்டத்தில் மறைந்து இருந்த தெருநாய் ஒன்று யாஸ்மிகாவை பார்த்ததும் கடிப்பதற்கு மேலே பாய்ந்தது. இதில் நிலை தடுமாறி அவர் கீழே விழுந்தார். அப்போது, தெருநாய் குழந்தையின் முகத்தில் கண்மூடி தனமாக கடித்து குதறியது. குழந்தையின் அலறல் சத்தம் கேட்டு, தாய் பிரதீபா தனது வீட்டில் இருந்து வெளியே ஓடி வந்து பார்த்தார். அப்போது, தெருநாய் ஒன்று தனது குழந்தையை கடித்து குதறுவதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். பின்னர், அருகில் கிடந்த கட்டையை எடுத்து நாயை அடித்து துரத்தினார். நாய் கடித்ததில் குழந்தையின் கன்னத்தில் சதை கிழிந்து ரத்த வெள்ளமாக காட்சியளித்தது.



இதையடுத்து, அக்கம் பக்கத்தினர் உதவியுடன் குழந்தையை மீட்டு அருகில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு பிரதீபா கொண்டு சென்றார். அங்கு குழந்தைக்கு நாய்கடிக்கான தடுப்பூசி போடப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், குழந்தையின் கன்னத்தில் தெருநாய் கடித்து குதறியதால், சதை கிழிந்து தொங்கியது. எனவே, கடந்த 28ந்தேதி குழந்தைக்கு பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட்டது. பின்னர், அன்று மாலையே குழந்தை ஆஸ்பத்திரியில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீட்டிற்கு அழைத்து செல்லப்பட்டார்.

இந்த சம்பவம் குறித்து யாஸ்மிகாவின் தந்தை சென்னை மாநகராட்சி அதிகாரிகளிடம் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் சம்பவம் நடந்த இடத்திற்கு மாநகராட்சி ஊழியர்கள் வந்து, குழந்தையை கடித்த நாயை தேடினர். ஆனால் அந்த நாய் கிடைக்காததால் திரும்பி சென்று விட்டனர்.

# பெண் யானையை குத்திக் கொன்ற ஆண் யானை

செங்கோட்டை, ஜூன்1

கேரளாவில் ஆரியங்காவு தேக்குமரக் காட்டில் இன்று பெண் யானை ஒன்று இறந்து கிடந்தது. இதைப் பார்த்த வனத்துறையினர் உடனடியாக இதுகுறித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர் . இதன் பேரில் வனத்துறையினர் மற்றும் கால்நடை மருத்துவ குழுவினர் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தனர். பின்னர் இறந்த யானையின் உடலை கால்நடைமருத்துவர் உடற்கூறாய்வு சோதனை செய்தார்.



அப்போது, யானையின் வயிற்றுப் பகுதியில் சுமார் 4 இடங்களில் யானை தந்தத்தால் குத்தப்பட்ட காயங்கள் இருந்ததைகண்டுபிடித்தனர். உடற்கூறாய்வுக்கு பின்பு அதே தேக்குமரக் காட்டில் யானையை குழி தோண்டி வனத்துறையினர் புதைத்தனர். யானை உயிரிழப்புக்கான காரணம் குறித்து வனத்துறையினர் கூறியதாவது: இரண்டு யானைகளுக்கு இடையே நடைபெற்ற பயங்கர சண்டையின் காரணமாக இந்த காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் .குறிப்பாக பெரிய அளவிலான ஆண் யானை ஒன்று உயிரிழந்த பெண் யானையின் வயிற்றில் தந்தத்தால் குத்திய காயங்கள் இருக்கிறது.அதன் காரணமாக பெண் யானை உயிரிழந்துள்ளது. இவ்வாறு வனத்துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

# டீ குடிக்கும்போதே பிரிந்த இன்ஸ்பெக்டர் உயிர்... ஓய்வு பெறும் நிலையில் சோகம்



ஊட்டி, ஜூன் 1

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தை சேர்ந்தவர் தனபால். நீலகிரி மாவட்ட குற்ற பதிவேடு ஆவண காப்பக பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் பணியில் இருந்த தனபால் ஊட்டி ஹில்பங்க் பகுதியில் உள்ள ஒரு கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தார். அப்போது திடீரென அவர் மயங்கி விழுந்தார். உடனே அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு ஊட்டி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள், தனபால் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். அவருக்கு ரத்த அழுத்த பாதிப்பு இருந்ததால் மாரடைப்பு ஏற்பட்டு இறந்திருக்கலாம் என்றும், மற்ற விவரங்கள் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரியவரும் என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர். இது குறித்து ஊட்டி மேற்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். உயிரிழந்த இன்ஸ்பெக்டர் தனபால் இன்று (வெள்ளிக்கிழமை) பணி ஓய்வு பெற இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# 10ந்தேதி திருமணம்.. ஆன்லைன் வர்த்தகத்தில் பணத்தை இழந்த என்ஜினீயர்.. கடனை அடைக்க எடுத்த விபரீத முடிவு



சென்னை, ஜூன் 1

சென்னை தாம்பரம் அடுத்த சேலையூர் காமராஜபுரம், நேதாஜி தெருவைச் சேர்ந்த சீதாலட்சுமி (வயது 70) என்பவரிடம் 2 பவுன் சங்கிலியும், கிழக்கு தாம்பரம், ஆஞ்சநேயர் தெருவில் நித்திய சுபா (49) என்ற பெண்ணிடம் 5 பவுன் சங்கிலியையும் மோட்டார்சைக்கிளில் வந்த வாலிபர் பறித்து சென்றுவிட்டார்.

இந்த சம்பவங்கள் குறித்து சேலையூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து சம்பவ இடத்தில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளையும், சங்கிலி பறிப்பு கொள்ளையன் மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்ற பகுதிகளில் உள்ள கண்காணிப்பு கேமராக்களையும் ஆய்வு செய்தனர்.

பின்னர் போலீசார் நடத்திய விசாரணையில் 2 பெண்களிடமும் சங்கிலி பறிப்பில் ஈடுபட்டது கோவில்பட்டியை சேர்ந்த அருணாச்சலம் (27) என்பதும், தற்போது சென்னையை அடுத்த மடிப்பாக்கம், ராம்நகர் பகுதியில் குடும்பத்துடன் சொந்த வீட்டில் வசித்து வந்ததும் தெரிந்தது. அவரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின:

சிவில் என்ஜினீயரிங் படித்து முடித்த அவருக்கு சரியான வேலை கிடைக்கவில்லை. இதனால் ஆன்லைன் வர்த்தகத்தில் கவனம் செலுத்தினார். ஆனால் அதில் நஷ்டம் ஏற்பட்டது. இதற்காக தங்கையின் திருமணத்துக்கு வைத்திருந்த நகை மற்றும் பலரிடம் கடன் வாங்கியது என சுமார் 15 லட்சம் ரூபாய் வரை ஆன்லைன் வர்த்தகத்தில் இழந்துவிட்டதாக கூறப்படுகிறது.

ஆன்லைன் வர்த்தகத்தில் பணத்தை இழந்து கடனாளியான அருணாச்சலம், சரியான வேலை இல்லாததால் கடனை திருப்பி செலுத்த பணம் இல்லாமல் தவித்தார். இதனால் 'யூடியூப்பில்' பார்த்து சங்கிலி பறிப்பில் ஈடுபட முடிவு செய்தார். அதன்படியே தனியாக செல்பவர்களை நோட்டமிட்டு சீதாலட்சுமி, நித்திய சுபா ஆகிய இருவரிடமும் சங்கிலி பறித்ததும் தெரிய வந்தது.

அதில் 5 பவுன் நகையை தங்கையின் திருமணத்துக்காக வீட்டில் கொடுத்துள்ளார். மீதமுள்ள 2 பவுன் நகையை அடகு வைத்து பணம் பெற்றதும், வருகிற 10ந் தேதி அவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு இருந்ததும் போலீஸ் விசாரணையில் தெரியவந்தது. கைதான அருணாச்சலம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்தசம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



# சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை ரூ.1 லட்சம் சிக்கியது

குமரி, ஜூன் 1

கன்னியாகுமரி அருகே கொட்டாரத்தில் சார் பதிவாளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இங்கு சார் பதிவாளராக (பொறுப்பு) அப்ரோஸ் பணியாற்றி வருகிறார். தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த இவர் தற்போது நாகர்கோவிலில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவர் லஞ்சம் வாங்குவதாக லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு ரகசிய தகவல் வந்தது.

இதைத் தொடர்ந்து குமரி மாவட்ட லஞ்ச ஒழிப்பு கூடுதல் போலீஸ் ஹெக்டேர் தர்மராஜ் தலைமையிலான போலீசார் நேற்று இரவு 9 மணி அளவில் சார் பதிவாளர் அலுவலகத்துக்கு சென்றனர். அப்போது அலுவலகத்தில் இருந்து வீட்டிற்கு புறப்பட தயாராக இருந்த சார் பதிவாளர் அப்ரோசை தடுத்து போலீசார் சோதனை செய்தனர்.

சோதனையில் சார்பதிவாளர் அப்ரோசின் பேன்ட் பாக்கெட்டில் ரூ.1 லட்சத்து 2 ஆயிரத்து 500 இருந்தது. இந்த பணம் எங்கிருந்து வந்தது? என்பது குறித்து அப்ரோசிடம் போலீசார் விசாரித்தனர். ஆனால் அந்த பணத்துக்கான கணக்கை அவர் கூறவில்லை. இதனையடுத்து கணக்கில் வராத அந்த பணத்தை போலீசார் பறிமுதல் செய்தனர்.

இதேபோல சார் பதிவாளர் அலுவலக உதவியாளர் மோகன் பாபு என்பவரிடம் இருந்து ஆயிரம் ரூபாயை போலீசார் பறிமுதல் செய்துள்ளனர். மேலும் சார்பதிவாளர் அலுவலகத்திலும் போலீசார் சோதனை நடத்தினர். சார் பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீர் சோதனை நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 10 ஆண்டுக்கு பிறகு கர்ப்பம்: காலையில் பிறந்த குழந்தை... மாலையில் கணவரின் உடல் அடக்கம்

விழுப்புரம், ஜூன் 1

விழுப்புரம் அருகே வி.அகரம் கிராமத்தை சேர்ந்தவர்சரவணன்மகன் சாரதி (வயது 28). இவர் கடந்த 23ந்தேதி கெங்கராம்பாளையத்தில் உள்ள விவசாய நிலத்தில் மோட்டார் கொட்டகை கட்டுவதற்காகசென்ட்ரிங்வேலையில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது நீளமான இரும்புக்கம்பியை தூக்கியபோது மேலே சென்ற உயரழுத்த மின் கம்பியில் பட்டு உரசியதில் சாரதி மீது மின்சாரம் தாக்கியது. இதில் பலத்த காயமடைந்த அவர் சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலன் அளிக்காமல் நேற்று முன்தினம் சாரதி பரிதாபமாக இறந்தார்.

இந்நிலையில் உயிரிழந்த சாரதிக்கு கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு சத்தியபிரியா(27) என்பவருடன் திருமணம் நடைபெற்றுள்ளது. இதுவரை அவருக்கு குழந்தை இல்லாத நிலையில் தற்போது அவரது மனைவி நிறைமாத கர்ப்பிணியாக இருந்தார்.

இந்த சூழலில்தான் எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி சாரதி இறந்துள்ளார்.

அவரது உடல் சொந்த ஊருக்கு கொண்டு வரப்பட்டு நேற்று காலையில் இறுதிச்சடங்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த சமயத்தில் அவரது மனைவிக்கு பிரசவ வலி ஏற்பட்டு, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை மூலம் அழகான ஆண் குழந்தை பிறந்தது. இதனிடையே நேற்று மாலையில் சாரதியின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

# தூக்கத்தில் பல்செட்டை விழுங்கிய பெண்... உணவுக்குழாயில் சிக்கியது அறுவை சிகிச்சை மூலம் அகற்றம்

விருதுநகர், ஜூன் 1

தூக்கத்தில்பல்செட்டை விழுங்கிய பெண்ணுக்கு சவாலான முறையில் மருத்துவம் செய்து விருதுநகர் அரசு கல்லூரி மருத்துவர்கள் காப்பாற்றியுள்ளனர். விருதுநகரைச் சேர்ந்த சுப்புலட்சுமி என்ற பெண் (57 வயது), தூக்கத்தில் பல்செட்டை விழுங்கியுள்ளார். இதனால் மூச்சு திணறல் ஏற்படவே மருத்துவரை அணுகியுள்ளார். விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு சிடி ஸ்கேன் எடுத்து பார்த்தபோது, கம்பியுடன் கூடிய பல்செட் உணவுக்குழாயில் சிக்கியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.





இதையடுத்து உடனடியாக மயக்க மருந்து செலுத்தி வாய் வழியாக குழாய் பொருத்தி சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும்,


நோயாளிக்கு எந்தவித பாதிப்பும் இன்றி அறுவை சிகிச்சை மூலம் பல்செட் எடுக்கப்பட்டதாகவும், அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் சீதாலட்சுமி தெரிவித்துள்ளார். தற்போது மூச்சுத்திணறல் மற்றும் உணவு உட்கொள்வதில் சிரமம் இல்லாமல், சுப்புலட்சுமி நலமாக உள்ளதாகவும் கல்லூரி முதல்வர் தெரிவித்தார்.

# பெரும்பாக்கம் சதுப்பு நிலத்தில் கொழுந்து விட்டு எரியும் தீ அணைக்கும் பணி தீவிரம்

ஆலந்தூர், ஜூன். 1

சென்னையை அடுத்த பெரும்பாக்கம் சோழிங்கநல்லூர் இடையே பள்ளிக்கரணை சதுப்பு நிலம் உள்ளது. இந்தசதுப்புநிலத்தில் கோர புல்கள் அதிகமாக உள்ளது. சதுப்பு நில பகுதியில் உயர் அழுத்த மின்சார வயர்கள் செல்கிறது.

இந்த நிலையில் சதுப்பு நிலத்தின்நடுவில்வளர்ந்து உள்ள கோர புல்கள் திடீரென தீப்பிடித்து எரிய தொடங்கியது. சுமார் அரை கிலோ மீட்டர்தூரம் தீ எரிந்ததால் அப்பகுதியில் சென்றவர்கள் தீயணைப்பு துறைக்கு தகவல் தந்தனர். பள்ளிக்கரணை வனத்துறை அதிகாரிகளும், தீயணைப்பு துறையினரும் விரைந்து வந்தனர்.



சதுப்பு நிலத்தின் நடுவே தீப்பிடித்து எரிவதால் உடனடியாக சென்று தீயை அணைக்க முடியாத நிலை ஏற்பட்டது. சதுப்பு நிலத்தின் நடுவே தீயை அணைக்க செல்வது எப்படி என அதிகாரிகள் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். அதிக வெயில் காரணமாக தீப்பிடித்ததா அல்லது உயர் அழுத்த மின் கம்பி உரசி தீப்பிடித்ததா என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது

# வெள்ளப்பெருக்கு குற்றாலம் அருவியில் குளிக்க தடை

தென்காசி, ஜூன். 1

குமரிக்கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தென் தமிழகத்தில் மழை பெய்து வருகிறது.

குறிப்பாக, மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் நல்ல மழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக குற்றாலம் அருவிக்கு வரும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

அனைத்து அருவிகளிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் குற்றாலம் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதித்து காவல் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.

# நெல்லை: சமோசா கடையில் வெடித்து சிதறிய சிலிண்டர்... 6 பேர் காயம்

நெல்லை, ஜூன் 1

நெல்லை மாவட்டம் டவுண் வடக்கு ரத வீதியில் சமோசா கடை ஒன்று செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதியில் செயல்பட்டுவந்த கடையில் இன்று மாலை சிலிண்டரில் கசிவு ஏற்பட்டு தீப்பிடித்தது. அப்போது திடீரென சிலிண்டர் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது.



இதில் அங்கிருந்தவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினர். இந்த விபத்தில் 6 பேர் காயமடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிலிண்டர் வெடித்ததில் கடை எரிந்து நாசமானது. இந்த விபத்து தொடர்பாக போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# தர்மபுரியில் 2 நாளாக பூட்டிய வீட்டில் துர்நாற்றம்.. திறந்து பார்த்த மக்களுக்கு காத்திருந்த பேரதிர்ச்சி

காரிமங்கலம். ஜூன். 1

தர்மபுரி மாவட்டம் காரிமங்கலத்தை அடுத்த மணிக்கட்டியூர் பகுதியை சேர்ந்தவர் சிவன் (வயது 38 ).ஆட்டோ டிரைவரான இவருக்கு நந்தினி ( 28) என்ற மனைவியும் அபினேஷ் ( 6), தர்ஷன் (5) என இரண்டு மகன்களும் இருந்தனர்.

சிவன் நந்தினிக்கு திருமணம் ஆகி 7 வருடங்கள் ஆகின்றன. நந்தினி வீட்டின் அருகில் உள்ள தனியார் மாவு மில்லில் வேலைக்கு சென்று வந்தார். இதற்கிடையே, கணவன் மனைவிக்கு இடையே அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில் சிவன் வீட்டில் கடுமையான துர்நாற்றம் 2 நாட்களாக வீசியது. இது குறித்து அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் சிவனின் வீட்டை எட்டிப் பார்த்தபோது நந்தினியும் அவரது இரண்டு குழந்தைகளும் அழுகிய நிலையில் பிணமாக கிடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். மேலும் அந்த மூன்று பேரின் பிணத்திற்கு அருகே சிவன் மயக்க நிலையில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தார்

உடனே அக்கம் பக்கத்தினர் காரியமங்கலம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர் தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து அப்பகுதி பொதுமக்கள் உதவியுடன் சிவனின் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்றனர் அங்கு மூன்று பேரின் உடல்களும் அழிய நிலையிலும் அதன் அருகில் சிவன் மயங்கிய நிலையிலும் கிடந்தார் உடனே அவரை மீட்டு சிகிச்சைக்காக தர்மபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சடலமாக கிடந்த மூன்று பேரின் உடல்களை போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் குறித்து காரிமங்கலம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ஆட்டோ டிரைவரான சிவன் தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளை முதலில் கொலை செய்து விட்டு அதன் பிறகு தானும் விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றாரா? அல்லது வேறு ஏதும் காரணமா? என பல்வேறு கோணங்களில் காரிமங்கலம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 1.6.2024

# வீட்ல லட்சுமி திருட்டுபோச்சு சஸ்பென்ஸ் நிறைந்த 'மகாராஜா' டிரைலர்




விஜய் சேதுபதியின் 50 வது படமாக 'மகாராஜா' படம் உருவாகியுள்ளது. குரங்கு பொம்மை படத்தை இயக்கிய நிதிலன் சாமிநாதன் இப்படத்தை இயக்குகிறார். இப்படத்தை சுதன் சுந்தரம் மற்றும் ஜெகதீஷ் பழனிச்சாமி இணைந்து தயாரிக்கின்றனர்.

இப்படத்தில் அனுராக் காஷ்யப், மம்தா மோகன்தாஸ், நட்டி, முனிஷ்காந்த், சிங்கம் புலி, பாரதிராஜா, வினோத் சாகர், பி.எல்.தேனப்பன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு அஜனீஷ் லோக்நாத் இசையமைக்கிறார்.

இந்த படத்தின் 'பர்ஸ்ட் லுக்' போஸ்டர், சில மாதங்களுக்கு முன் வெளியானது. அதில் இதுவரை கண்டிராத அவதாரத்தில் விஜய் சேதுபதியின் தோற்றம் அமைந்திருந்தது. ஒரு சலூனுக்குள் ஆழ்ந்த சிந்தனையில் காயங்களுடன் விஜய் சேதுபதி அமர்ந்துள்ள அந்த போஸ்டர் ரசிகர்களின் ஆர்வத்தைத் தூண்டியுள்ளது.

தற்பொழுது படத்தின் டிரைலர் வெளியாகியுள்ளது. விஜய் சேதுபதி ஒரு சலூன் கடையை வைத்துள்ளார். வீட்டில் உள்ள லட்சுமி காணாமல் போனது என்று போலிஸ் ஸ்டேஷனில் புகார் அளிக்கிறார். அந்த லட்சுமி யார் என போலிஸ் விசாரிக்கிறது. யார் அந்த லட்சுமி என்பதை மர்மமாகவே வைத்திருக்கின்றனர். டிரைலர் மிகவும் சஸ்பன்சோடு அமைந்திருக்கிறது. விரைவில் இப்படம் திரைக்கு வர இருக்கிறது. படத்தின் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்பு தற்பொழுது உருவாகியுள்ளது.

# சூர்யா 44 படத்தில் இணையும் முன்னணி நட்சத்திரங்கள்




நடிகர் சூர்யாவின் 44 ஆவது படத்தை இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் இயக்குகிறார். இந்த படத்தை சூர்யாவின் 2டி மற்றும் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன் பென்ச் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன. இந்த படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார்.

இந்த படத்தில் சூர்யா இரட்டை வேடங்களில் நடிக்க இருப்பதாகதகவல் வெளியாகி உள்ளது. இதில் சூர்யாவுக்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், சூர்யா 44 படத்திற்கு ஷ்ரேயாஸ் கிருஷ்ணா ஒளிப்பதிவு பணிகளை மேற்கொள்ள ஷஃபீக் முகமது அலி படத்தொகுப்பு செய்கிறார்.

சண்டை பயிற்சி பணிகளை கெச்சா கம்பக்தீ மேற்கொள்கிறார், கலை இயக்க பணிகளை ஜாக்கியும், ஆடை வடிவமைப்பு பணிகளை பிரவீன் ராஜா மேற்கொள்கின்றனர்.

சூர்யா 44 படத்தில் மலையாள நடிகரான ஜோஜு ஜார்ஜ் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கிறார். இதைதொடர்ந்து உறியடி விஜயகுமார் வில்லன் கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளார் எனவும், மலையாள நடிகர் ஜெயராம் இப்படத்தில் நடிக்கவுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து அதிகாரப்பூர்வ தகவல் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பாலஸ்தீன மக்களுக்காக குரல் கொடுக்கும் திரைப்பிரபலங்கள்




பாலஸ்தீனத்தின் காசாமுனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேலின் போர் 7 மாதங்களாக நீடித்து கொண்டிருக்கிறது. இருத்தரப்பினரும் அமைதி ஒப்பந்தத்திற்கு வராமல் போர் தொடுத்து வருகின்றனர்.

நேற்று இஸ்ரேலி டிஃபன்ஸ் ஃபோர்ஸ் ரஃபாபில் உள்ள அகதிகள் முகாமில் ஏவுகனைகளை வீசினர், இந்த தாக்குதலில் சிறு குழந்தைகள் உட்பட 45 பேர் மரணமடைந்தனர். இந்த தாக்குதல் குறித்து சமூக வலைத்தளங்களில் 'All Eyes On Rafah" என்ற புகைப்படம் அனைவராலும் பகிரப்பட்டு வந்தது. இதுவரை இஸ்ரேல் ஹமாஸ் இடையிலான போரில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதுக்குறித்து 'All Eyes On Rafah" புகைப்படத்தை பகிர்ந்து இந்திய திரையுலக பிரபலங்கள் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

ஆலியா பட், டியா மிர்ஸா, கரீனா கபூர், ரிச்சா, வருண் தவான்,ராஷ்மிகா மந்தனா, திரிஷா, சமந்தா, பார்வதி, துல்கர் சல்மான் போன்றவர்கள் அவர்களது சமூக வலைத்தளங்களில் 'All Eyes On Rafah" படத்தை பதிவிட்டு தாக்குதல் நடத்தும் இஸ்ரேலுக்கு தங்களின் கண்டனத்தை தெரிவித்தனர்.

# சென்னை சாலைகளில் வலம் வந்த பிரபாஸின் புஜ்ஜி



இந்தியத் திரையுலகமே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சயின்ஸ் பிக்சன் திரைப்படமான 'கல்கி 2898 கி.பி' படம் வரும் ஜூன் 27, 2024 அன்று திரைக்கு வருகிறது. படம் திரைக்கு வருவதையொட்டி படக்குழுவினர், புரமோசன் பணிகளை மிகப்பிரம்மாண்டமாக துவங்கியுள்ளனர்.

சமீபத்தில் மே 22, 2024 அன்று, ஹைதராபாத்தில் பிரம்மாண்ட விழாவில், படத்திற்காக மஹேந்திரா கம்பெனி மூலம் பிரத்தியேகமாக உருவாக்கிய, படத்தில் பயன்படுத்தப்படும் எதிர்கால வாகனமான 'புஜ்ஜி'யை அறிமுகப் படுத்தினர். பைரவா என்ற பிரபாஸின் சிறந்த நண்பனாக படம் முழுதும் அவருடன் ஒரு எதிர்கால வாகனம் வருகிறது. இந்த அற்புதமான படைப்பான, 'புஜ்ஜி' யை அறிமுகப்படுத்திய நடிகர் பிரபாஸ் அதனை ரசிகர்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்தினார். இந்த புஜ்ஜி கதாப்பாத்திரத்திற்கு நடிகை கீர்த்தி சுரேஷ் குரல் கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து, தற்போது இந்த வாகனம் சென்னை மஹேந்திரா சிட்டிக்கு கொண்டுவரப்பட்டு, பொதுமக்கள் முன்னிலையில் பார்வைக்கு வைக்கப்பட்டது. பைரவாவாக வரும் பிரபாஸும், புஜ்ஜியும் படத்தில் மிக முக்கிய பாத்திரத்தை வகிக்கிறார்கள். புஜ்ஜி டீசர் வைரலாகி, வரவேற்பை பெற்ற நிலையில், இவ்வாகனத்தைக் காண மக்கள் அலையெனத் திரண்டனர். கற்பனையிலும் நினைத்து பார்த்திராத வடிவத்தில், மூன்று சக்கரங்களுடன், நவீன வசதிகளுடன், பார்த்தவுடன் எதிர்காலத்தை கண்முன் கொண்டு வரும் வகையிலான புஜ்ஜி வாகனம், பார்த்தவர்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. ஆயிரக்கணக்கில் கூடி இவ்வாகனத்தை பார்வையிட்ட மக்கள், பட டீசரில் நடிகர் பிரபாஸ் அமர்ந்து பயணித்த இடத்தில் அமர்ந்து, ஆவலுடன் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டனர். அமிதாப் பச்சன், கமல்ஹாசன், பிரபாஸ், தீபிகா படுகோன் மற்றும் திஷா பதானி உள்ளிட்ட இந்தியாவின் முன்னணி நட்சத்திரங்கள் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ள 'கல்கி 2898 AD' படத்தை நாக் அஷ்வின் இயக்கியுள்ளார், வைஜெயந்தி மூவிஸ் தயாரித்துள்ளது. ஒரு பன்மொழி படைப்பாக, புராணக்கதைகளால் ஈர்க்கப்பட்ட, எதிர்காலத்தில் நடக்கும் அறிவியல் புனைகதை வகையில் இப்படம் உருவாகியுள்ளது. ஜூன் 27, 2024 அன்று திரைக்கு வருகிறது.

# இந்தியன் 2 திரைப்படத்தின் மாபெரும் இசை வெளியீட்டு விழா




இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் நடிகர் கமல்ஹாசன் 'இந்தியன் 2 ' படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் கமலுடன் பிரியா பவானி சங்கர், காஜல் அகர்வால், ரகுல் ப்ரீத் சிங், சித்தார்த், பாபி சிம்ஹா, சமுத்திரக்கனி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு அனிருத் இசையமைத்து உள்ளார். லைகா மற்றும் ரெட் ஜெயண்ட் நிறுவனம் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளது. இத்திரைப்படம் வரும் ஜூலை மாதம் 12 ஆம் தேதி வெளியாகவுள்ளது. 18 ஆண்டுகளுக்கு பிறகு ஷங்கருடன் மீண்டும் இணைந்து இந்தியன் 2 திரைப்படம் உருவாகியுள்ளது.

இப்படத்தின் முதல் பாடலான 'பாரா பாரா' பாடல் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்ற நிலையில் இப்படத்தின் அடுத்த பாடலான 'நீலோற்பம்' நேற்று வெளியாகியுள்ளது. தற்பொழுது படத்தின் இசை வெளியீட்டு விழா வரும் ஜூன் 1 ஆம் தேதி சென்னையில் உள்ள நேரு ஸ்டேடியத்தில் மாலை 6 மணிக்கு நடக்க இருக்கிறது. இந்த இசை வெளியீட்டு விழா மாபெரும் பிரமாண்டத்துடன் நடைப்பெறவுள்ளது.

# அனல் பறக்கும் ஆக்ஷன் காட்சிகள்.. கவனம் ஈர்க்கும் கருடன் மேக்கிங் வீடியோ

துரை செந்தில்குமார் இயக்கத்தில் சூரி, சசிகுமார் மற்றும் உன்னி முகுந்தன் முன்னணி கதாப்பாத்திரத்தில் நடித்திருக்கும் படம் கருடன், இப்படம் நாளை {மே30} வெளியாகவுள்ளது.

சமுத்திரக்கனி, மைம் கோபி, ரேவதி ஷர்மா, ரோஷினி ஹரிபிரியன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். வெற்றி மாறன் கதை எழுதியுள்ளார். படத்தின் டிரைலர் சில நாட்களுக்கு முன் வெளியாகி மக்கள் கவனத்தை பெற்றது. இந்நிலையில் படத்தின் மேகிங் வீடியோவை தற்பொழுது படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். இதில் படப்பிடிப்பு பணிகள், சூரியின் ஆக்ஷன் பயிற்சிகள், சண்டை காட்சிகள் எவ்வாறு எடுக்கப்பட்டன என ஒரு முன்னோட்டமான காட்சிகள் இடம்பெற்றுள்ளது. விடுதலை திரைப்படம் போல் சூரிக்கு அடுத்த வெற்றி தரும் திரைப்படமாக கருடன் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்: 3வது சுற்றுக்கு முன்னேறினர் ஜோகோவிச், மெத்வதேவ்



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நடந்துவருகிறது. முதல் சுற்று முடிந்து 2வது சுற்றுப் போட்டிகள் நேற்று நடந்தன.

இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2வது சுற்று போட்டியில் செர்பிய வீரர் ஜோகோவிச், ஸ்பெயின் வீரர் ராபர்டோவுடன் மோதினார். இதில் 64, 61, 62 என்ற செட் கணக்கில் வென்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் ரஷியாவின் டேனில் மெத்வதேவ், செர்பியாவின் மியோமிருடன் மோதினார். இதில் மெத்வதேவ் முதல் செட்டை 61 என எளிதில் கைப்பற்றினார். 2வது செட்டில் 50 என முன்னிலை பெற்ற நிலையில், மியோமிர் காயத்தால் விலகினார்

இதனால் மெத்வதேவ் 3வது சுற்றுக்கு முன்னேறினார்.

# நார்வே செஸ் தொடரில் அக்கா, தம்பி முதல் இடம்: ரசிகர்கள் மகிழ்ச்சி




நார்வேயில் சர்வதேச செஸ் தொடர் நடைபெற்று வருகிறது. 5 முறை உலக சாம்பியனான நார்வேயின் கார்ல்சன், நடப்பு உலக சாம்பியனான சீனாவின் டிங் லிரென், இந்தியாவின் பிரக்ஞானந்தா உள்பட 6 பேர் ஓபன் பிரிவில் பங்கேற்கின்றனர். பெண்கள் பிரிவில் இந்தியாவின் வைஷாலி, ஹம்பி உட்பட 6 பேர் பங்கேற்கின்றனர். ஒவ்வொரு சுற்றிலும் இருமுறை மோதவேண்டும்.

இன்று நடந்த 3வது சுற்றில் இந்திய வீரர் பிரக்ஞானந்தா கார்ல்சனை எதிர்கொண்டார். வெள்ளை காய்களை கொண்டு விளையாடிய பிரக்ஞானந்தா கார்ல்சனை வீழ்த்தினார். இந்த வெற்றி மூலம் 5.5 புள்ளிகளுடன் முதல் இடத்திற்கு முன்னேறினார்.

இந்நிலையில், மகளிருக்கான செஸ் பிரிவில் கிளாசிக்கல் ஆட்டத்தில் நட்சத்திர வீராங்கனை ஹம்பியை முதல் முறையாக வீழ்த்தி அசத்தினார் வைஷாலி. இதன்மூலம் புள்ளிப் பட்டியலில் 5.5 புள்ளிகளுடன் வைஷாலி முதலிடத்தில் இருக்கிறார். இவருக்கு பின் 2வது இடத்தில் 4.5 புள்ளிகளுடன் வென்ஜுன் 2வது இடத்தில் இருக்கிறார்.

நார்வே செஸ் தொடரில் தமிழ்நாட்டின் பிரக்ஞானந்தாவும், அவரது சகோதரி வைஷாலியும் முன்னிலையில் இருப்பது ரசிகர்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



# சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன்: லக்ஷயா சென், கிடாம்பி ஸ்ரீகாந்த் தோல்வி

சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டி சிங்கப்பூரில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் இந்தியாவின் லக்ஷயா சென், டென்மார்க்கின் விக்டர் அக்செல்சென்னுடன் மோதினார்.

இதில் லக்ஷயா சென் 1321, 2116, 1321 என்ற நேர் செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்து தொடரில் இருந்து வெளியேறினார்.

மற்றொரு வீரரான கிடாம்பி ஸ்ரீகாந்த், ஜப்பான் வீரர் நரோகாவுடன் மோதினார். இதில் கிடாம்பி 421 என முதல் செட்டை இழந்தார்.

2வது செட்டில் 311 என பின்தங்கியிருந்த நிலையில், காயம் காரணமாக விலகினார். இதன்மூலம் தொடரில் இருந்தும் வெளியேறினார்.

சிங்கப்பூர் ஓபன் தொடரின் முதல் சுற்றிலேயே இந்திய வீரர்கள் 2 பேர் வெளியானது ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

# எனக்கும் கோலிக்கும் உண்டான உறவு... மனம் திறந்து பேசிய கம்பீர்



ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் இடையிலான போட்டியின் போது விராட் கோலி மற்றும் கொல்கத்தா அணியின் ஆலோசகர் கவுதம் கம்பீர் கட்டியணைத்து கொண்ட சம்பவம் இணையத்தில் பேசுபொருளாக மாறியது. இந்த சம்பவங்கள் குறித்து பேசிய விராட் கோலி, "கம்பீர் உடன் நான் சமரசத்தில் ஈடுபட்டது பலருக்கும் ஏமாற்றத்தை அளித்துவிட்டது. அவர்களுக்கு மசாலா தீர்ந்துவிட்டது என நினைக்கிறேன்" என்று கிண்டலாக தெரிவித்திருந்தார். இந்நிலையில் கோலி உடனான உறவு குறித்து கம்பீர் வெளிப்படையாக பேசியுள்ளார். "விராட் கோலி உடனான எனது உறவை இந்த நாடு அறியத் தேவையில்லை. உங்களின் கணிப்புகள் எல்லாம் உண்மைக்கு வெகு தொலைவில் உள்ளன. அணியின் வெற்றிக்கு உதவுவதற்காக, உணர்ச்சிகளை வெளிப்படுத்த என்னைப்போல அவருக்கும் உரிமை உண்டு. எங்களின் உறவு மக்களுக்கு மசாலா கொடுக்கும் உறவாக இருக்காது" என்று கம்பீர் தெரிவித்துள்ளார். அண்மையில் இந்திய அணியின் புதிய தலைமை பயிற்சியாளராக கம்பீர் நியமிக்கப்படலாம் என்ற தகவல் பரவி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# டி20 உலகக் கோப்பை பைனலில் ஆஸ்திரேலியா பாகிஸ்தான் மோதும்: நாதன் லயன் ஆருடம்





டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் வருகிற 1ந்தேதி வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் தொடங்குகிறது. இந்த நிலையில் எந்தெந்த அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும், இறுதிப் போட்டியில் மோதப்போகும் அணிகள் எவை ? என்பது குறித்து விவாதம் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் என ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் ஸ்பெஷலிஸ்ட் நாதன் லயன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாதன் லயன் கூறுகையில் "டி20 உலகக் கோப்பை இறுதிப் போட்டியை பொறுத்தவரையில் ஒரு அணி எது என்றால் வெளிப்படையாக அது ஆஸ்திரேலியாதான். ஏனென்றால், நான் ஆஸ்திரேலியா சார்புடையவன். மற்றொரு அணி என்றால் அது பாகிஸ்தான் அணிதான். அங்குள்ள கண்டிசனை பொறுத்த வரையில் சுழற்பந்து வீச்சு எடுபடும். பாகிஸ்தான் அணியில் தரமான சுழற்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். மேலும், பாபர் அசாம் போன்று எலக்ட்ரிக் பேட்டர்ஸ் உள்ளனர்" எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், "இந்த தொடரில் மிட்செல் மார்ஷ் அதிக ரன்கள் அடித்தவர்கள் பட்டியலில் முதலிடம் பிடிக்க வாய்ப்புள்ளது. பேட்டிங் பவர் உடன், சிறப்பாக பந்து வீசும் திறனும் பெற்றுள்ளார்" என்றார்.

இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, வெஸ்ட் இண்டீஸ், தென்ஆப்பிரிக்கா ஆகிய அணிகள் நான்கு அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும் என முன்னாள் வீரர்கள் கணித்துள்ளனர்.



**அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்**
**வழுக்கியுங் கேடீன் பது**

**விளக்கம்:**

**பொறாமை உடையவர்க்கு வேறு பகை வேண்டா.அஃதுஒன்றேபோதும்,பகைவர் தீங்கு செய்யத் தவறினாலும் தவறாது கேட்டைத் தருவது அது.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.